## ஜனவரி - 4

**"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு." - சங் 27:14**

தேவனுடைய எல்லா ஏற்பாடுகளிலும் காலம் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. ஆகையால், நாம் ஆவலுடன் விரும்புகிற ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைய தாமதிக்கும்பொழுது அதன் மூலமாக நம்முடைய சகிப்புத்தன்மையின் சோதனை ஏற்படும்போது நாம் ஏமாற்றமடையக்கூடாது. உலகத்தை உருவாக்கவும் அதை மனித குடியிருப்புக்காகத் தகுதியாக்கவும் தேவன் காலத்தை எடுத்துக்கொண்டார். தீமையோடு கொண்டுள்ள அவசியமான அனுபவத்தை உலகத்துக்குக் கொடுக்கக் காலம் வேண்டியிருக்கிறது. உலகின் இரட்சகராகக் கிறிஸ்துவின் வருகைக்காகத் தேவையான முன்னேற்பாடுகள் செய்யக் காலம் வேண்டியிருந்தது. சபையும் சுவிசேஷயுகத்தின் பாக்கியுள்ள ஜனங்களும் அவருடைய மகிமையான ஆட்சியில் பங்கு கொள்ள அவர்களைத் தயார் செய்யக் காலம் வேண்டியிருக்கிறது. அவருடைய ஜனங்களின் தனிப்பட்டவர்களுடைய விபகாரங்களை உருப்படுத்துவதற்காகவும், ஒழுங்குபடுத்துவதற்காகவும் சமயத்தை அனுமதிக்க வேண்டும். நம்முடைய ஜெபங்களுக்கு உத்தரவு நீண்ட காலமாகத் தாமதமாகத் தோன்றும்போது, தேவன் மறக்கவில்லை. சிட்டுக்குருவி தரையிலே விழுவதில் கவனம் செலுத்துகிறவரும், நம்முடைய தலையிலுள்ள மயிரை எல்லாம் எண்ணுகிறவருமான அவர், தன்னுடைய மிகவும் தாழ்மையான பிள்ளையின் தெளிவற்ற கூப்பிடுதலுக்கும் அதன் மிகச் சிறிய தேவைக்கும் அலட்சியமாயிருக்கிறவரல்ல. **- Z '95, 20 (R 1759).**

தன்னுடைய ஜனங்களுடைய சார்பாகவுள்ள தேவனுடைய பராமரிப்புகள் அவர்களுடைய பொறுமையை சோதிக்க அநேக தாமதத்தைக் கொண்டதாயிருக்கின்றன. இந்தச் சோதனைகளை தைரியமான இருதயத்தோடு தாங்கிக் கொள்ளுகிறவர்கள் அதன் மூலமாகக் கர்த்தரில் பலமடைகிறார்கள். ஆகையால், அவர்களுக்காக இருக்கிறவர் தங்களுடைய ஜீவியத்தில் வருகிற ஒவ்வொரு ஏற்ற சமயத்திலும் இதை வெளிக்காட்டுவார் என்று நிச்சயப்படுத்தப்பட்டு, ஜீவியத்தின் மாறுபடும் எல்லா சந்தர்ப்ப நிலைகளின் மத்தியிலும் அவர்கள் கர்த்தருக்குக் காத்திருக்கிறார்கள். **-P '33, 191.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எரே 14:22; சங் 25:3,5,21; 39:7; 123:2; 62:1,2,5; 33:20; 37:7; ஓசியா 12:6; கலா 5:5; சங் 130:5,6; 40:1; 25:21; 69:3; மீகா 7:7; தானி 12:12; ஏசா 40:31;64:4.**

**கோபுர வாசிப்பு : Z '15, 190 (R 5711).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் கர்த்தருக்குக் காத்திருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?**